வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

# ஈழநாடு

Eelanadu — ஈළනාඩු

விலை ரூ. 30/=




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer
Ria MONEY TRANSFER
WESTERN UNION MONEY TRANSFER



Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 19.05.2026 செவ்வாய்க்கிழமை இதழ் : 133 பக்கங்கள் : 08


# கண்ணீரால் நனைந்தது முள்ளிவாய்க்கால் மண்!

## பெருந்திரளானோர் ஒன்றுகூடி உணர்வுபூர்வ அஞ்சலி

முல்லைத்தீவு, மே. 19

தமிழினப் படுகொலையின் 17 ஆம் ஆண்டு நினைவு நாளான நேற்று (மே 18) முள்ளி வாய்க்கால் நினைவு முற்றத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்றுகூடித் தமது உற வுகளுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத் தினர்.

நேற்று காலை 10:15 மணியளவில் தவத் திரு அகத்தியர் அடிகளாரால் கொள்கைப் 07



## சென்னையில் உணர்வு ரீதியான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

### அர்ச்சுனா எம்.பியும் பங்கேற்றார்



சென்னை, மே. 19

முள்ளிவாய்க்கால் இனவழிப்பை நினைவு கூர்ந்து தமிழ்நாடு - சென்னையில் நேற்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க் கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. 07

## யாழ். பல்கலைக்கழகத்திலும் நேற்று நினைவேந்தல் நிகழ்வு



யாழ்ப்பாணம், மே. 19

யாழ் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் 07

## தமிழின அழிப்புக்கு காரணமான குற்றவாளிகளை குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தவேண்டும்!

### முள்ளிவாய்க்காலில் நேற்று பிரகடனம்

(முழுமையான செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## யுத்த வெற்றியை மறக்கக்கூடாது!

### கூறிகிறார் மகிந்த

கொழும்பு, மே. 19

யுத்த வெற்றியை கொண் டாடுவதையிட்டு மகிழ்ச்சிய டைகிறேன். இந்த தினத்தை 07

## இணைய குற்றங்களில் வெளிநாட்டவர்கள் தீவிர விசாரணைகளை ஆரம்பித்தது அரசு!

கொழும்பு, மே. 19

அண்மைக் காலமாக இலங்கையில் அரங்கேறி வரும் இணையக்குற்றங்கள் தொடர்பான விசாரணை கள் மற்றும் வெளிநாட்ட வர்களின் கைதுகள் குறித்து கொழும்பு போர்ட் சிற்றி (கொழும்பு துறைமுக நக ரம்) நிர்வாகம், நிதியமைச்சு, பொலிஸ் மற்றும் குடிவரவு குடிய கல்வு திணைக்க ளம் ஆகியவற்றுடன் கலந் துரையாடல்களை ஆரம் பித்துள்ளது.

இந்த செய்தியை கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சில வெளிநாட்ட வர்கள், கொழும்பு போர்ட் சிற்றி 07

## வடக்கில் பணியின்றி சம்பளம் பெற்றுள்ள ஐந்து மருத்துவர்கள்!

### உடனடி இடமாற்றத்துக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், மே. 19

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் ஐந்து மருத்துவர்கள் எந்தவித பணியிலும் ஈடுபடாமல் வேத னம் பெற்றுள்ளமை தொடர்பில் தகவல்கள் வெளி யாகியுள்ளன.

வடக்கு மாகாணத்திற்குட்பட்ட பல 07

## பொலிஸாருடன் நடந்த தள்ளுமுள்ளு; இழுத்துச் செல்லப்பட்டார் வீரவன்ஸ!

### கொழும்பில் பெரும் பதற்றம்



கொழும்பு, மே. 19

கொழும்பில் நேற்று போர்வீரர்களை நினைவுகூரும் நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்துவதற்குச் சென்ற முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ மற்றும் அவரது ஆதரவாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதால், அங்கு பெரும் பரபரப்பும் அமைதியற்ற சூழலும் ஏற் பட்டது.

பாராளுமன்றத்திற்கு அருகிலுள்ள ரணவிரு 07

## பசிலின் மல்வானை வீடு பல்கலைக்கழகத்துக்கு!

### உறுதியளித்தார் பிரதமர்

கொழும்பு, மே. 19

பேச்சுவார்த்தை வெற்றியடைந்ததால் மல்வானை வீட்டிலிருந்து வெளியேறவுள்ளதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

பசில் ராஜபக்ஷவுக்கு சொந்தமானது எனக் கருதப்படும் மல்வானை பகுதியில் அமைந்துள்ள 07

## யுத்த வெற்றியின் 17ஆவது ஆண்டு நினைவு விழா இன்று கொழும்பில்!

கொழும்பு, மே. 19

யுத்த வெற்றியின் 17ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, "தேசிய வெற்றி விழா நினைவு நிகழ்வு" கடந்த ஆண்டுகளைப் போலவே பாரம்பரிய முறைப்படி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில், பத்தரமுல் லையில் அமைந்துள்ள இராணுவ நினைவிடத் துக்கு முன்பாக இன்று செவ்வாய்க்கிழமை நடை பெறவுள்ளது.

இம்முறை நினைவு நிகழ்வில் முதற் தடவை யாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உயிர்த் தியாகம் செய்த இராணு வத்தினரின் உறவினர்க ளும் கலந்து கொள் ளவுள்ளதாக அர சாங்க தகவல் 07

## அரசின் புதிய வரி கொள்கை ஜனநாயகத்துக்கு விரோதம்!

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 19

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கையானது நாட் டின் ஜனநாயகத்துக்கு விரோதமானதாகவும், அடிப்படை மற்றும் மனித உரிமைகளை மீறும் வகையிலும் அமைந் துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வரி நிர்வாகம், தொடர்பான வரி நிபுணர்கள், தொழில்முனைவோர் மற்றும் இத் துறையோடு தொடர்புடைய ஏனைய 07

## ஆடுகள் அடைக்கச் சென்ற இளைஞன் சடலமாக மீட்பு!

### மன்னாரில் துயரச் சம்பவம்

மன்னார், மே. 19

மன்னார் பகுதியில் தனது ஆடுகளைப் பட்டியில் அடைக்கச் சென்ற இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப் பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மன்னார், கள்ளிக்கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய அனோஜன் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் கடந்த சனிக்கிழமை 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கையின் சுற்றுலாத்துறை வருமானத்தில் 38.8 வீத வீழ்ச்சி!

கொழும்பு, மே. 19

2026 ஏப்ரல் மாதத்தில் மொத்த சுற்றுலாத்துறை வருமானம் 157.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இது 38.8 வீத வீழ்ச்சியை பதிவு செய்துள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2026 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்துள்ள மொத்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 876,277 ஆக பதிவாகியுள்ளது.

அத்துடன், இக்காலப்பகுதியில் ஈட்டப்பட்ட மொத்த சுற்றுலா வருவாய் 1,111 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என இலங்கை மத்திய வங்கி யின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் புள்ளிவிவரங்களின்படி, 2026 ஏப்ரல் மாதத்தில் நாட்டுக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 135,643 ஆகும்.

இது, 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான 896,884 சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் 1,379 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருவாயுடன் ஒப்பிடுகையில், சுற்றுலாப் பயணிகளின் வருகை 2.3 வீதமும், சுற்றுலா வருவாய் 19.4 வீதமும் வீழ்ச்சியடைந்துள்ளமையை காட்டுகின்றது. (அ)

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று உரும்பிராயில்!



முல்லைத்தீவு, மே. 19

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு உரும்பிராயில் அமைந்துள்ள முதல் விடுதலை போராளி பொன்.சிவகுமாரின் சிலை அருகில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பொன். சிவகுமாரின் சிலைக்கு மாலை அணிவித்து முள்ளிவாய்க்கால் நினைவாக பொதுச் சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

பொதுமக்களில் 100 பேருக்கு அரிசிப்பொதிகளும் வழங்கப்பட்டன. இதன்போது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், முன்னாள் வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன் வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

## அமித் வீரசிங்க கைது!

கொழும்பு, மே. 19

மஹாசோன் படை அமைப்பின் முன்னாள் தலைவர் அமித் வீரசிங்க, பெருமளவிலான நிதி மோசடி குற்றச்சாட்டுகளின் கீழ் கண்டி தெல்தெனிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்லேகல மற்றும் எல்ல ஆகிய பகுதிகளில் கபானா ரக தங்குமிடங்களை அமைத்துத் தருவதாகக் கூறி, பலரிடம் பெருந்தொகை பணத்தைப் பெற்று மோசடி செய்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும், தன் மீதான இந்தக் குற்றச்சாட்டுகளை அமித் வீரசிங்க முற்றாக நிராகரித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே அமித் வீரசிங்கவுக்குச் சொந்தமான நிறுவனத்தின் முகாமைத்துவ இயக்குநர் கைது செய்யப்பட்டுள்ளதாக விசாரணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிதி மோசடி விவகாரத்தில் அமித் வீரசிங்கவுக்கு எதிராக இரண்டு உத்தியோகபூர்வ முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## 95 ரக ஒக்ரேன் பெற்றோல் சுப்பர் டீசல் தட்டுப்பாடு!

கொழும்பு, மே. 19

பல எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் 95 ரக ஒக்ரேன் பெற்றோல் மற்றும் சுப்பர் டீசல் கையிருப்பு இல்லை என பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

95 ரக ஒக்ரென் பெற்றோல் மற்றும் சுப்பர் டீசல் கையிருப்பை பராமரிக்க ரூ. 3 மில்லியனுக்கும் அதிகமாக முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது.

இருப்பினும் அந்த எரிபொருளை விற்பனை செய்வதன் மூலம் பெருநிறுவன எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்குக் கிடைக்கும் இயக்க இலாபம் சுமார் ரூ. 45,000 ஆக மட்டுமே உள்ளது என்றும், எனவே நாடு முழுவதும் உள்ள பல எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் இந்த இரண்டு வகை எரிபொருள்களும் கிடைப்பதில்லை என்றும் பெற்றோலிய விநி யோகஸ்தர்கள் சங்கம் தெரிவிக் கிறது.

95 ரக ஒக்ரேன் பெற்றோல் மற்றும் சுப்பர் டீசலின் தினசரி விற்பனை 500 லீற்றருக்கும் குறைவாக இருப்பதால், ஒரு கையிருப்பை விற்க இரண்டு வாரங்களுக்கு மேல் ஆகிறது என்றும், மேலும் 45,000 ரூபாய் தள்ளுபடித் தொகை ஊழியர்களின் சம்பளத்தைக் கொடுக்கக் கூடப் போதுமானதாக இல்லை என்றும் அந்தச் சங்கம் சுட்டிக் காட்டுகிறது.

மேலும், இந்த இரண்டு வகை எரிபொருள்களுக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்கும் வீதத்தை விட இரண்டு மடங்குக்கும் அதிகமான தள்ளுபடியை வெளிநாட்டு எரிபொருள் நிறுவனங்கள் விநியோகஸ்தர்களுக்கு வழங்கி வருவதாகவும், அதிகபட்ச சில்லறை விலையில் 3 வீதம் தள்ளுபடி அளிப்பதாகவும் சங்கம் குறிப்பிடுகிறது.

இதன் காரணமாக, கொழும்புக்கு வெளியே உள்ள பகுதிகளில் பல கூட்டுத்தாபன எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் 95 ரக ஒக்ரேன் பெற்றோலும் சுப்பர் டீசலும் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது என்றும், நவீன வாகனங்களைப் பயன்படுத்தும் நுகர்வோர் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என்றும் சங்கம் வலியுறுத்துகிறது. (அ)

## சட்டவிரோத சிகரெட்டுகளுடன் வெளிநாட்டவர் ஒருவர் கைது!

கொழும்பு, மே. 19

கொள்ளுப்பிட்டி நிமல்கா கார்டன் பகுதியில் வரி இன்றி இறக்குமதி செய்யப்பட்ட 540 சிகரெட்டுகளுடன் வெளிநாட்டவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்கள் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போதே 35 வயதுடைய சீன நாட்டவரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வரு கின்றனர். (அ)

# எரிபொருளுக்கு மானியம் வழங்க அரசாங்கம் முடிவு

கொழும்பு, மே. 19

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக உலக சந்தையில் எரிபொருள் விலைகள் உயர்மட்டத்தில் காணப்படுவதைக் கருத்திற்கொண்டு, எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு ஒரு லீற்றர் டீசலுக்கு 100 ரூபாயும், பெற்றோலுக்கு 20 ரூபாயும் மானியம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த மானியக் கொடுப்பனவுகளுக்காக 57 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் தலைவர் டி.ஜே. ராஜகருணா தெரிவித்துள்ளார்.

ஒரு லீற்றர் டீசலை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கு சுமார் 750 ரூபாய் செலவாகும் போதிலும், அது தற்போது 392 ரூபாய்க்கே விற்பனை செய்யப்படுவதால் கூட்டுத்தாபனத்திற்கு லீற்றர் ஒன்றுக்கு 358 ரூபாய் நட்டம் ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிபொருள் இறக்குமதிக்கான செலவு டொலரின் மதிப்பை நேரடியாகப் பாதிப்பதாகத் தெரிவித்துள்ள தலைவர், கடந்த ஏப்ரல் மாதத்தில் எரிபொருளுக்காக 522 மில் லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்ட நிலையில், மே மாதத்தில் அது 324 மில்லியன் டொலர்களாகக் குறைவ டைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், மாற்று விகிதங்களைப் பாதுகாக்கும் நோக்கில் பொதுமக்கள் எரிபொருள் பயன்பாட்டை முடிந்தவரை கட்டுப்படுத்துமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

எவ்வாறாயினும், எதிர்பாராத அவசர நிலைமைகள் ஏதும் ஏற்படாவிடின், இந்த ஆண்டின் எஞ்சிய பகுதிக்கு தடையற்ற எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், சுத்திகரிப்பு நிலைய நடவடிக்கைகள் தொடர்வதோடு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரை தேவையான சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள்களைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

## முள்ளிவாய்க்கால் நினைவு தினம் நேற்று வவுனியாவில் அனுஷ்டிப்பு

வவுனியா, மே. 19

இறுதி யுத்தத்தில் மரணித்தவர்களை நினைவு கூரும் முள்ளிவாய்க்கால் நினைவு நாளான நேற்று வடக்கு- கிழக்கில் பல்வேறு இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

வவுனியாவிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா குருமன்காடு பிள்ளையார் ஆலயத்தில் முள்ளிவாய்க்கால் அஞ்சலி நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

நிகழ்வில் பொதுமக்கள், அடியார்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு போரில் உயிரிழந்த மக்களுக்கு தீபமேற்றி ஆத்ம சாந்தி வழிபாடுகளில் ஈடுபட்டனர். (அ)

## வேலைவாய்ப்பு அமைச்சின் ஆவண சான்றளிப்பு நிறுத்தம்

### கணினி அமைப்பில் கோளாறு

கொழும்பு, மே. 19

கணினி அமைப்பில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, வெளிநாட்டு விவகாரங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் கீழ் இயங்கும் தூதரக விவகாரப் பிரிவின் அனைத்து ஆவணச் சான்றளிப்புச் சேவைகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஆவணங்களைச் சான்றளிக்கும் கணினி அமைப்பில் ஏற்பட்டுள்ள முடக்கம் காரணமாகவே மறுஅறிவித்தல் வரை இந்தச் சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், பத்தரமுல்லையில் அமைந்துள்ள பிரதான தூதரக விவகார அலுவலகம் மட்டுமன்றி, யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி, மாத்தறை மற்றும் குருநாகல் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து வலய அலுவலகங்களின் சேவைகளும் இவ்வாறு முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன.

எவ்வாறாயினும், தொழில்நுட்பக் குழுவினர் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் இணைந்து இந்தத் தொழில்நுட்பக் கோளாறைச் சரிசெய்து, சேவைகளை விரைவாக வழமைக்குக் கொண்டுவருவதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
19.05.2026 செவ்வாய்க்கிழமை
பராபவ வருடம், வைகாசி 05

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# டி.பி.எஸ். ஜெயராஜ்; பத்திரிகை உலகில் ஒரு நிறுவனம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை கனடாவின் றொறண்டோவில் இடம்பெற்ற டேவிட் பியூவெல் சபாபதி ஜெயராஜின் (72) மரணம் பத்திரிகைத் துறையில் இருந்து மாத்திரமல்ல, தமிழ்ச் சமூகத்திடமிருந்தும் ஒரு பேராளுமையை அபகரித்துச் சென்றுவிட்டது. அவரது இழப்பை ஈடு செய்யமுடியாதது என்று அல்ல, நிச்சயமாக ஈடு செய்யப்பட வேண்டியது என்றே கூற வேண்டும். அவரைப் போன்ற ஒரு பத்திரிகையாளர் தமிழ்ச் சமூகத்துக்கு மீண்டும் அவசியம்.

ஜெயராஜ் ஒருபுறத்தில் நேசிக்கப்பட்ட அளவுக்கு மறுபுறத்தில், வெறுக்கப்பட்ட ஒருவராகவும் விளங்கினார். சரியானது என்று தனக்கு மனதிற்பட்டதை ஒளிவுமறைவின்றி துணிச்சலாக பொதுவெளியில் அவர் சொன்னதே அதற்கு காரணமாகும். தங்களது அரசியல் நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே ஜெயராஜை ஒவ்வொருவரும் நோக்கினார்கள். தன்னை மற்றவர்கள் எவ்வாறு பார்க்கிறார்கள் என்று அவர் கவலைப்பட்டிருப்பார் என்று கூறமுடியாது.

அச்சமின்றி பகுப்பாய்வு செய்து எழுதவும் இலங்கை அரசியலின் குறிப்பாக,தமிழர் அரசியலின் வரலாற்றின் சகல சிக்கலான பரிமாணங்களையும் அவை நிகழும்போதே பதிவுசெய்யவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர் ஜெயராஜ். இலங்கையில் மாத்திரமல்ல, தெற்காசியாவிலும் அரசியல் பகுப்பாய்வுத் துறையில் பல தசாப்தங்களாக பிரமாண்டமான ஒரு ஆளுமையாக கம்பீரமாக விளக்கியவர் அவர்.

ஜெயராஜின் எழுத்துக்கள் வெறும் சமகால அறிக்கைகளாக மட்டுமன்றி, இன்றியமையாத வரலாற்று ஆவணங்கள்கவும் அமைகின்றன. சிக்கலான புவிசார் அரசியல் பிரச்சினைகள், பிராந்திய மோதல்கள் மற்றும் உள்நாட்டு அதிகாரப் போக்குகளை அவிழ்த்து விளக்கும் அவரது இணையற்ற ஆற்றல் காரணமாக அவரது ஆய்வுக் கட்டுரைகள் நீண்டகாலமாக அரசியல் தலைவர்கள், இராஜதந்திரிகள்,. அறிஞர்கள், சாதாரண குடிமக்கள் என்று சகல தரப்பினரினதும் கண்டிப்பான வாசிப்புக்கு உரியவையாக விளங்கின.

இனரீதியாக கடுமையாக துருவமயப்பட்ட இலங்கைச் சமூகத்தில் ஜெயராஜின் பணி துல்லியமாக உண்மையைச் சரிபார்ப்பதிலும் ஆழமான நினைவாற்றலிலும் வெளிப்படைத்தனமை மற்றும் உறுதியான அர்ப்பணிப்பிலும் நிலைகொண்டிருந்தது.

ஜெயராஜின் மறைவுக்கு ஈழநாடு செய்யும் அஞ்சலி, அறிவுசார்ந்த துணிச்சலாலும் துல்லியமான விபரிப்பாலும் வரையறுக்கப்பட்ட ஒரு ஒரு பத்திரிகையாளனின் வாழ்நாள் பணிக்கு வழங்கப்படும் ஒரு பெரும் கௌரவமாகும்.

ஜெயராஜின் பேனை வரலாற்றின் போக்குகளை வெறும் பதிவாக மாத்திரம் செய்யவில்லை. அந்த போக்குகள் எந்த ஆழத்தில் இருந்து பாய்ந்துவந்தன என்பதையும் நாம் புரிந்துகொள்ள உதவியது.

அதிகாரத்தில் உள்ளவர்களை நோக்கி உண்மையை உரத்துப் பேசுதல், தெளிவுடனும் கண்ணியத்துடனும் தளராத நேர்மையுடனும் அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுத்தல் ஆகியவையே ஊடகங்களின் உண்மையான பணி என்று நம்பும் பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் அவதானிகளுக்கும் எதிர்காலச் சசந்தியினருக்கும் ஜெயராஜின் பத்திரிகைத்தறைப் பங்களிப்பு என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் ஒரு வழிகாட்டியாகும்.

அவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் மனைவிக்கும் குடும்பத்தவர்களுக்கும் ஈழநாட்டின் ஆழ்ந்த அனுதாபங்கள்.

# தமிழின அழிப்புக்கு காரணமான குற்றவாளிகளை குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தவேண்டும்!

## முள்ளிவாய்க்காலில் நேற்று பிரகடனம்

தமிழ் இன அழிப்புக்கு சர்வதேச நீதி வேண்டி குற்றவாளிகளை குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்துவற்கு வலியுறுத்துவதோடு தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும் பாரதீனப்படுத்தவியலாத சுயநிர்ணய அடிப்படையிலும், தமிழர்களின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும் என்று முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு வடக்கு கிழக்கினால் தமிழின அழிப்பிற்கு எதிரான தேசிய எழுச்சி நாளான நேற்று முள்ளிவாய்க்கால் முற்றத்தில் வெளியிடப்பட்ட பிரகடனத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது.

இந்தப் பிரகடனத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு-

தமிழ் இன அழிப்பு முள்ளிவாய்க்காலில் உச்சந்தொட்டு இன்றுடன் 17 ஆண்டுகள் நிறைவடைகின்றது. தமிழ் இன அழிப்பு செயல்முறை ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட வரலாற்று பரிமாணத்தை கொண்டது. பேரரசு கட்டமைப்பின் புவிசார் நலன்களுக்காகவும் சிங்கள பௌத்த பேரினவாத ஏகாதிபத்தியத்தை தக்க வைப்பதற்காகவும் கூட்டு தமிழ் இன அரசியல் வேணாவாவை அதன் ஆயுத பரிமாணத்தை இனப்படுகொலைக்கூடாக முடிவுக்கு கொண்டு வந்ததன் மாயையை முள்ளிவாய்க்காலில் நிகழும் தமிழினப்படுகொலை நினைவு கூறல் தகர்த்து எறிகின்றது.

17 ஆண்டுகள் கடந்தும் இம்மண்ணிலே கொத்துக்கொத்தாய் கொல்லப்பட்ட இரத்த சொந்தங்களுக்கு நினைவு நடுகற்கள் இன்றி ஆகாயமே எல்லையாக அவர்களின் கனவுகளை சுமந்து வரும் காற்றே சாட்சியாக, இரத்தம் தோய்ந்த மண்ணில் தேசத்திற்கான கனவுகளை சுமந்து, அடக்கு முறையை எதிர்த்து, விடுதலைப் பயணத்தை கூட்டாக தொடர ஒரு தேசமாக முள்ளிவாய்க்கால் திடலில் ஒன்று கூடியுள்ளோம். எமது கூட்டு அரசியல் கோரிக்கைகள் நியாயமானவை, அறத்தாற்ப்ரியம் கொண்டவை. இவை இன்னொரு கூட்டு குழுமத்தின் கூட்டு தனி இருப்பை அச்சத்திற்கு உள்ளாக்கவில்லை என்பதையும் மீள வலியுறுத்துகின்றோம்.

ஒட்டுமொத்தத்தில் தமிழ் தேசிய நம்பிக்கை மீதான போரை சிங்கள அரசும் துருவப் பேரரசு கட்டமைப்பும் கட்டவிழ்த்துள்ளது. தமிழ் தேசிய நம்பிக்கை தான் ஈழத் தமிழினத்தின் ஆத்மா தமிழ் தேசிய கூட்டு உளவியலின் ஆத்மா தான் எங்களுடைய கூட்டுத்திறாணி. இதை வலுப்படுத்த வேண்டிய வரலாற்றுத் தேவை என்றுமில்லாதவாறு இன்று எம்முன் வைக்கப்படுகின்றது

நமக்குள்ள மிகப்பெரும் ஆயுதமாக விரிந்து கிடப்பது தமிழ் தேசிய நினைவு தினம். நாங்கள் நினைவு கூறும் வரைக்கும் எங்களை யாராலும் அழிக்க முடியாது. கழிந்த காலம் எமக்கான எதிர்காலத்தை வடிவமைக்க உதவி செய்கின்றது. தற்போதைய வரலாற்றுக் காலம் பண்பாட்டு மீள் எழுச்சிகான காலம் . ஈழத் தமிழினம் எமக்கான வரலாற்று வேர்களைத் தேடிப் பயணிக்க வேண்டிய காலம் பண்பாட்டு மீள் எழுச்சி ஈழத் தமிழினத்திற்கான பண்பாட்டு அடையாளத்தை செதுக்குகின்றது.

முள்ளிவாய்க்கால் ஈழத் தமிழின எழுச்சியின் அடையாளம் தமிழின அழிப்பை முள்ளிவாய்க்கால் திடலில் நினைவு கூறுவது மீண்டும் இனத்தின் எழுச்சியை சுட்டு நிற்கிறது ஈழத் தமிழ் இனமாக சிங்கள அரசு அடக்குமுறைக்கு எதிராகவும் சிங்கள ஒற்றை ஆட்சி அரசியல் அழகை தனது புவிசாரணங்களுக்காக தக்கவைத்துக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய பேரரசு கட்டமைப்பின் அடக்குமுறைக்கு எதிராகவும் போராட அணி திரள்வதைத் தவிர வேறு எவ்வித தெரிவும் தமக்கு முன்வைக்கப்படவில்லை.

இரத்தம் தோய்ந்த இம்மண்ணிலிருந்து போராட கனத்த காற்று சுமந்து வரும் அவர்களின் நினைவுகளின் மீதும் நாம் கொண்டிருக்கும் தமிழ் இன விடுதலை நம்பிக்கை மீதம் சபதம் செய்வோம்.

01.சிங்கள பௌத்தமயமாக்கப்படும் தமிழ் தாயகத்தை தடுக்கவும் தமிழ் தேசியத்தை நாளாந்த வாழ்வியலாக்கவும்

02. உள்ள தமிழ் இன அழிப்பில் சர்வதேச நீதி வேண்டி அரச பொறுப்பையும் மேற்குலக நாடுகளின் உடந்தை தன்மையையும் வலியுறுத்தி குற்றவாளிகளை குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தவும்

03.தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்திற்கு உரியவர்கள் என்பதையும் தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும் ஒருபோதும் பாரதீனப்படுத்தவியலாத சுயநிர்ணய அடிப்படையிலும், தமிழர்களின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும் என வலியுறுத்தவும்

04.கூட்டு ஈழத் தமிழர் இருப்பின் மீது கட்டவிழ்க்கப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட தமிழின அழிப்பை தடுக்கவும்

05.தமிழ் தேசிய நம்பிக்கையின் உறுதி கொண்டு ஒரு குடையின் கீழ் தமிழின அடக்குமுறைக்கு எதிராக தமிழின விடுதலையை நோக்கி முனைப்புடன் தொடர்ந்து போராட எமது மக்கள் பலத்தை நம்பிக்கும் தொடர்ந்து அடிபணியாது போராடுவோம்-என்றுள்ளது. (அ)

# வெவ்வேறு இடங்களில் நீரில் மூழ்கி 5 பேர் பலி!

கொழும்பு, மே. 18

கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் பதிவான நீரில் மூழ்கிய விபத்துக்களில் சிக்கி 5 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கெக்கிராவ மற்றும் தெல்தெனிய ஆகிய பிரதேசங்களிலிருந்தே இந்த அனர்த்தங்கள் பதிவாகியுள்ளன.

கெக்கிராவ, சமகிகம பகுதியில் கைவிடப்பட்டிருந்த கற்குவாரி ஒன்றில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் [illegible] ஆகிய இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் ஹப்புத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 39 மற்றும் 41 வயதுடைய சகோதரர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தெல்தெனிய - விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்று நீரில் மூழ்கிக் காணாமல்போயிருந்த மற்றைய இளைஞனின் சடலமும் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் தெல்தெனிய விகாரைக்கு அருகில் உள்ள பகுதியில் நான்கு இளைஞர்கள் விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்றுள்ளனர்.

இதன்போது அவர்களில் மூவர் நீரில் மூழ்கி காணாமல் போயிருந்தனர்.

அனர்த்தம் நிகழ்ந்த உடனே முன்னெடுக்கப்பட்ட தேடுதல்களில் இரண்டு இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டிருந்த நிலையில், காணாமல் போயிருந்த மூன்றாவது இளைஞனின் சடலமும் நேற்று பொலிஸாரால் கண்டெடுக் கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மே - 19 செவ்வாய்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 05
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 3.00 - 04.30
திதி : திரிதியை




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அழகும் இளமையும் கூடும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். நல்லன நடக்கும் நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் வளைந்து கொடுத்து போவது நல்லது.

**மிதுனம்**
குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் வந்து போகும். பழைய கடன் பிரச்னை அவ்வப்போது மனசை வாட்டும். உறவினர்களுடன் பகைமை வந்து செல்லும்.

**கடகம்**
ராஜதந்திரமகுடும்பத்தில் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும்.

**சிம்மம்**
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சாதிக்கும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**துலாம்**
தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வெளியூரில் இருந்து நல்ல செய்தி வரும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும்.

**தனுசு**
பணப்புகுடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். புதுமை படைக்கும் நாள். ழக்கம்

**மகரம்**
சுபச் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கை தரம் உயரும். பொருட்களை வாடிக்கை யாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை.

**கும்பம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களால் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு.

**மீனம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். பூர்வீக சொத்து பிரச்சினைக்கு தீர்வு காண்பீர்கள். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள்.

# முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்காக நந்தக்கடலில்

முல்லைத்தீவு, மே 19

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 17ஆம் ஆண்டு நினைவுநாள் நேற்றாகும். அந்த வகையில் முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு வன்னி அமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்றுத் திங்கட்கிழமை நந்திக் கடலில் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

நந்திக்கடலில் மலர்தூவி, சுடரேற்றி உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திவேண்டி பிரார்த்தனையும் மேற்கொள்ளப்பட்டது.



மேலும் இந்த அஞ்சலி நிகழ்வுகள் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான மகாதேவா குணசிங்கராசா, இரத்தினம் ஜெகதீசன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். (எ)

# இலங்கையை விளம்பரப்படுத்த மெகா டிஜிற்றல் திட்டம் ஆரம்பம்

## பிரதி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மே 19

இலங்கையின் சுற்றுலாத்துறையை சர்வதேச ரீதியில் மேம்படுத்துவதற்கான விசேட டிஜிற்றல் ஊக்குவிப்பு விளம்பர திட்டமொன்று எதிர்வரும் சில வாரங்களில் ஆரம்பிக்கப் படவுள்ளது என்று சுற்றுலாத் துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலா அமைச்சில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப் பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

முதற்கட்டமாக இந்தியா, சீனா, இங்கிலாந்து, ரஷ்யா, ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளை இலக்கு வைத்து இந்த டிஜிற்றல் சுற்றுலா ஊக்குவிப்பு விளம்பர திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்காக சுமார் ஒரு பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் குறுகிய காலத்திற்குள் நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கணிசமாக அதிகரிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, இந்த வருடத்தின் இறுதி பகுதியில் சுமார் 5 பில்லியன் ரூபாய் செலவில் பல வருடங்களுக்கு நீடிக்கக் கூடிய வகையில் பாரியளவி லான தேசிய சுற்றுலா மேம் பாட்டுத் திட்டமொன்றை ஆரம் பிக்கவும் திட்டமிடப் பட்டுள் ளது. இலங்கை சுற்றுலா அமைச்சு மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை ஆகிய வற்றுடன் இணைந்து உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய சர்வதேச நிதி நிறுவ னங்கள் இத்துறையை சார்ந்த அனைத்து முதலீடுகளை தற்போது மேற்கொண்டு வருகின்றன.



அத்துடன் உலகளாவிய ரீதியில் நிலவும் சவால்களுக்கு மத்தியிலும் இந்த புதிய உத்திகள் மூலம் இவ்வருடத்தில் சுமார் 30 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு ஈர்ப்பதே அரசாங்கத்தின் இறுதி இலக்காகும். அது நிறைவேறும் என்று எதிர்ப்பார்க்கின்றோம்- என்றார். (எ)

# வவுனியாவில் முள்ளிவாய்க்கால் நினைவு தினம்

வவுனியா, மே 19

இறுதி யுத்தத்தில் மரணித்தவர்களை நினைவு கூரும் முள்ளிவாய்க்கால் நினைவு நாளான நேற்று வடக்கு- கிழக்கில் பல்வேறு இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

அந்த வகையில் வவுனியாவிலும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா குருமன்காடு பிள்ளையார் ஆலயத்தில் முள்ளிவாய்க்கால் அஞ்சலி நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பொதுமக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு போரில் உயிரிழந்த மக்களுக்கு தீபமேற்றி ஆத்மசாந்தி வழிபாடுகளில் ஈடுபட்டனர்.(ஏ-10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# டொலர் நெருக்கடியால் வரி உயர்வு: கோட்டா பாதையில் அரசு செல்கிறது

## மரிக்கார் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 19
அரசாங்கம் பாரிய டொலர் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதால், வாகன இறக்கும தியை தடை செய்யாமல் வாக னங்களுக்கான வரியை அதிக ரித்துள்ளது. எதிர்காலத்தில் வீடுகளில் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் உபகரணங்க ளுக்கும் வரியை அதிகரிக்கும். அதனால் கோட்டாபய சென்ற வழியிலேயே இந்த அரசாங்கம் பயணிக்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பில் ஞாயிற்றுக்கி ழமை நடைபெற்ற செய்தியா ளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், அரசாங்கம் 33 வீதம் மின் சார கட்டணத்தை குறைப்ப தாக தெரிவித்து, தற்போது மின்சார கட்டணத்தை 40 வீதம் அதிகரித்துள்ளது. அதேபோன்று உணவு, கல்வி மற்றும் சுகாதாரம் தொடர் பான பொருட்களின் வரியை பூச்சியமாக்குவதாகவே தெரி வித்தது. ஆனால், 2024 செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி இருந்ததை விட அதிக விலைக்கே உணவுப்பொருட் கள், மருந்துப்பொருட்கள் மற் றும் பாடசாலை உபகரணங் களை கொள்வனவு செய்கிறோம்.

அதேபோன்று தற்போது டொலரின் பெறுமதி 330 ரூபாயாக அதிகரித்துள்ளது. இதனால் நாட்டில் டொலருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் திறைசேரியில் இருந்து 2.5 மில்லியன் டொலர் காணாமல் போயுள்ளது. என்.டி.பி வங்கி, சிறிலங்கா எயார்லைன்ஸ் போன்ற நிறுவனங்களில் இருந்து பாரியளவில் டொலர் மோசடி செய்யப்பட்டிருக்கிறது. இது தொடர்பில் அரசாங்கம் எது வும் கதைப்பதில்லை. அதனை மறைப்பதற்கே முயற்சித்து வரு கிறது- என்றார். (எ)

# உலக சந்தையில் மீண்டும் உயரும் எண்ணெய் விலை

கொழும்பு, மே 19
உலக சந்தையில் மசகு எண் ணெய் விலை நேற்று மீண்டும் அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இதன்படி ஒரு பீப்பாய் பிரெண்ட் வகை மசகு எண் ணெய் விலை 2.44 சதவீதம் உயர்ந்துள்ளதுடன், அதன் புதிய விலை 111.7 அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள் ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. டபிள்யூ.டி.ஐ. வகை மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் புதிய விலை 108.32 அமெரிக்க டொலர்களாக பதிவாகி யுள்ளது.

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையிலான அமைதிப் பேச்சு வார்த்தைகளில் நிச்சயமற்ற நிலை மற்றும் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் மீதான சமீ பத்திய தாக்குதல்கள் காரண மாக மீண்டும் மசகு எண்ணெய் சடுதியாக அதிகரித்து வருவ தாக சுட்டிக்காட்டப்பட் டுள்ளது. (எ)

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களுடன் ஒருவர் கைது

கொழும்பு, மே 19
அத்துருகிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிலேனியம் சிற்றி வீடமைப்புத் தொகு தியில் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண் டுவரப் பட்ட இரண்டு மோட் டார் சைக்கிள்களை வைத்தி ருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்திய குற்றப்புலனாய்வு பணியகத்தினால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது.

இதன்போது, எவ்வித அனு மதிப்பத்திரமும் இன்றி வெளி நாடுகளில் இருந்து சட்டவி ரோதமாக நாட்டுக்குள் கொண் டுவரப்பட்ட 02 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன.

அத்துருகிரிய பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய இளை ஞன் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

மத்திய குற்றப்புலனாய்வு பணியகத்தின் நிதி மற்றும் வர்த்தக குற்றப்புலனாய்வு பிரிவின் உத்தியோகத்தர்க ளினால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் மத்திய குற்றப்புலனாய்வு பணியகம் ஈடுபட்டு வருகின்றது. (எ)

# சட்டவிரோத சிகரெட்களுடன் சீனப் பிரஜை ஒருவர் கைது

கொழும்பு, மே 19
கொள்ளுப்பிட்டி நிமலகா கார்டன் பகுதியில் தீர்வை வரி இன்றி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 540 சிகரெட்க ளுடன் வெளிநாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவின் உத்தி யோகத்தர்கள் குழுவினால் முன் னெடுக்கப்பட்ட சோதனையின் போதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதானவர் 35 வயதுடைய சீன நாட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொள் ளுப்பிட்டி பொலிஸார் மேல திக விசாரணைகளை முன்னெ டுத்து வருகின்றனர்.(எ)

# வீரவன்ஸ உள்ளிட்ட 6 பேருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, மே. 19
முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட 6 பேருக்கு எதிரான வழக்கின் மேலதிக சாட்சி விசாரணை ஜூலை 13ஆம் திகதிக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு கொழும் பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலு வலகத்துக்கு முன்பாக ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டு வீதிகளை மறித்து பொதுமக் களுக்கு இடையூறு விளைவித் ததாக குற்றம் சாட்டப்பட்ட இந்த வழக்கு, கொழும்பு பிர தான நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டது.

இதன்போது விமல் வீர வன்ஸ உள்ளிட்டோர் நீதிமன் றத்தில் முன்னிலையாகாததால் விசாரணை ஒத்திவைக்கப்பட் டுள்ளது. (அ)

# 24 மணித்தியாலங்களில் நீரில் மூழ்கி ஐவர் பலி!

கொழும்பு, மே 19
நேற்றுக்காலை 6 மணியு டன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் நாட் டில் பதிவான நீரில் மூழ்கிய விபத்துக்களில் சிக்கி, ஐந்து பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கெக்கிராவ மற்றும் தெல் தெனிய ஆகிய பகுதிகளில் இந்த சம்பவங்கள் பதிவாகின.

கெக்கிராவ, சமகிகம பகுதியில் உள்ள கைவிடப் பட்ட ஏரி ஒன்றில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் ஹப்புத் தளை பகுதியைச் சேர்ந்த 39 மற்றும் 41 வயதுடைய இரு சகோதரர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

இதேவேளை, தெல்தெனிய - விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்று நீரில் மூழ்கி மூவர் உயிரிழந்தனர்.

நான்கு இளைஞர்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தெல்தெனிய, பம்பர வல விகாரைக்கு அருகிலுள்ள பகுதியில் விக்டோரியா நீர்த் தேக்கத்தில் நீராடச் சென்றி ருந்த போதே, அவர்களில் மூவர் நீரில் மூழ்கி காணாமல் போயி ருந்தனர்.

அவர்களில் இரு இளைஞர்க ளின் சடலங்கள் சம்பவ இடத் திலேயே கண்டெடுக்கப்பட்ட நிலையில், காணாமல் போயி ருந்த மற்றைய இளைஞனின் சடலம் பின்னர் தேடிக் கண்டு பிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ் பேசும் சமூகத்தை பிரிப்பதையே நோக்கமாக கொண்டு ஒரு சில சக்திகள்

## சாணக்கியன் எம். பி. குற்றச்சாட்டு

கொழும்பு, மே 19

அரசியல் கட்சிகளையும் தமிழ் பேசும் சமூகத்தையும் பிரிப்பதையே நோக்கமாகக் கொண்டு ஒரு சில சக்திகள் இன்று ஊடகப் போர்வைக்குள் இயங்கி வருகின்றன- இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் குற்றம் சாட்டியுள்ளார்.

மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.எல்.எம். சலீமின் நினைவஞ்சலி மற்றும் "கிழக்கின் ஊடக முதுசொம்" புத்தக வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கம் சங்கரம்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

இன்று ஒரு தொலைபேசி, ஒரு இன்ரர்நெற் பக்கேஜ், ஒரு சிம் கார்ட், ஒரு யு- ரியூப் சனல் இருந்தால் அவர்கள் அனைவரும் ஊடகவியலாளர் என்று சொல்லி தங்களை அழைத்துக் கொள்வார்கள். இவர்களில் ஒரு சிலருடைய இந்தத் துறையிலான இயக்கத்துக்குரிய காரணமே பொய்யான செய்திகளை பரப்புவது, சமூகங்களுக்கு இடையில் வன்முறையைத் தூண்டுவது, குழப்பங்களை ஏற்படுத்துவது, கட்சிகளைப் பிரிப்பது, தமிழ் சமூகத்தைப் பிரிப்பது இவ்வாறான சில விடயங்களைச் செய்வதற்காகவே ஆகும்.

தமிழ் பேசும் உறவுகள், தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றாகப் பயணிக்க வேண்டும். இந்த நாட்டிலே தற்பொழுது தமிழ் பேசும் மக்களுக்குத் தலைவர்கள் என்று நாங்கள் தான் என்று சொல்லும் ஒரு அரசாங்கம் இருக்கும் காலப்பகுதியிலே, தமிழ் பேசும் கட்சிகள் நாங்கள் ஒன்றுபட்டு தமிழ் மக்களுக்கான சிறந்த ஒரு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்குச் செயல்பட வேண்டும்.- என்றார். (எ)

# வெளிவிவகார அமைச்சின் சான்றிதழ் வழங்கும் பணி தற்காலிகமாக நிறுத்தம்

கொழும்பு, மே 19

வெளிவிவகார அமைச்சின் மின்னணு ஆவணச் சான்றளிப்பு முறைமையில் ஏற்பட்டுள்ள அவசர தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, அனைத்து ஆவணச் சான்றளிப்புச் சேவைகளும் மறுஅறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், பத்தரமுல்லையில் உள்ள தூதரக விவகாரப் பிரிவின் முதன்மைக் அலுவலகம் உட்பட யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி, மாத்தறை மற்றும் குருநாகல் ஆகிய பிராந்திய தூதரக அலுவலகங்களின் சேவைகளும் இவ்வாறு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

தொடர்புடைய தொழில்நுட்ப சேவை வழங்குநர்களுடன் இணைந்து, "ந-னுயுளு" முறைமையை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக வழமைக்குக் கொண்டுவந்து, சாதாரண சேவைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஏற்கனவே இணையவழியில் நேரத்தை ஒதுக்கியுள்ள விண்ணப்பதாரர்கள், அடுத்தகட்ட அறிவிப்புகள் மற்றும் இற்றைப் படுத்தல்களுக்கு **"e-Channeling"** முறைமையை அவதானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முறைமை வழமைக்குத் திரும்பியவுடன் அது குறித்து அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அறிவிக்கப்படும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இந்த திடீர் முடக்கம் காரணமாக பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களுக்குத் தூதரக விவகாரப் பிரிவு தமது வருத்தத்தை தெரிவித்து கொள்கிறது. (எ)

# 17 வருடங்கள் கடந்தும் நீதி கிடைக்கவில்லை

## நடிகர் நிழல்கள் ரவி கவலை

சென்னை, மே 19

யுத்தம் முடிவடைந்து 17 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும் ஈழத்து தமிழ் உறவுகளுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என்று தென்னிந்திய பிரபல திரைப்பட நடிகர் நிழல்கள்ரவி கவலை வெளியிட்டுள்ளார்.



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பான்மையின அரசின் அடக்குமுறையை எதிர்த்து சிறுபான்மையின மக்களான தமிழ் மக்கள், 30 ஆண்டுகளாக உரிமைக்காக ஆயுதம் ஏந்திப் போராடினர்.

கடந்த 2009 மே 18 அன்று சர்வதேச நாடுகளின் பங்களிப்புடன் அந்த யுத்தமானது மௌனிக்கப்பட்டது.

இந்த யுத்தத்தில் இலட்சக்கணக்கான உயிர்கள் பலியாகின. இந்த யுத்தத்தில் பல போர்க் குற்றங்கள் இடம்பெற்றன. ஆனால், 17 வருடங்கள் கடந்தும் இதுவரை அதற்கான நீதி கிடைக்கவில்லை.

அத்துடன் பாதிக்கப்பட்ட இனம் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட வண்ணமே உள்ளது. இவை அனைத்தும் முடிவுக்கு வந்ததான் முள்ளிவாய்க்கால் மண்ணில் பலியாகிய இலட்சக் கணக்கான உயிர்களின் ஆன்மாக்கள் சாந்தியடையும்.

எமது தொப்புள்கொடி உறவுகள் உயிர்களை, உடைமைகளை இழந்து நாதியற்று நடுத்தெருவில் நிற்கின்றார்கள்.

முள்ளிவாய்க்கால் மண்ணில் விதைக்கப்பட்ட உறவுகளுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈழத்தமிழ் உறவுகளுக்காக எனது குரல் தொடர்ந்து ஒலிக்கும் என்பதை அந்த உறவுகளுக்கும் சர்வதேச சக்திகளுக்கும் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

என்றும் ஈழத்தமிழர்களின் நிழலாக இந்த நிழல்கள் ரவி இருப்பார் என உருக்கமாக அவர் தெரிவித்துள்ளார். (எ)

# கொட்டகலையில் அதிசய வாழைமரம்



நுவரெலியா, மே 19

கொட்டகலை - பாத்தியாபுரம் பகுதியில் உள்ள வீட்டுத் தோட்டம் ஒன்றில், வாழை மரத்தின் தண்டுப் பகுதிக்கு நடுவிலிருந்து வாழைக்குலை ஒன்று வெளிவந்துள்ளமை அப்பகுதி மக்களிடையே பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொதுவாக வாழை மரத்தின் உச்சிப் பகுதியிலேயே வாழைக்குலை தோன்றுவது வழக்கம். ஆனால், இந்த மரத்தின் நடுப்பகுதியில் இரு தண்டுகளுக்கு இடையில் இருந்து வாழைக்குலை வெளிவந்துள்ளமை அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இந்த அதிசயப் பின்னணியைக் கொண்ட வாழைமரத்தை அப்பகுதி மக்கள் பலரும் ஆர்வத்துடன் நேரில் வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர்.

அத்துடன், இதன் படங்களை சமூக வலைத்தளங்களிலும் பகிர்ந்தும் வருகின்றனர்.

# தப்பிச்செல்ல முற்பட்ட நபர் மீது அம்பாறையில் துப்பாக்கிச் சூடு!

கல்முனை, மே 19

அம்பாறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனையுடன் தொடர்புடைய ஒருவரை கைது செய்யச் சென்ற போது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இந்தச் சோதனையை மேற்கொண்ட போது, சந்தேகநபர் உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்து அவர்கள் மீது தாக்குதல் நடத்த முயன்றுள்ளார்.

பின்னர் சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அங்கிருந்து அவர் தப்பியோடியுள்ளார்.

இதன்போது, நடமாடும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சந்தேகநபரை கைது செய்ய முற்பட்ட போது, சந்தேகநபர் அந்த உத்தியோகத்தரின் துப்பாக்கியை பறிக்க முயன்றுள்ளார்.

அப்போது ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாக சந்தேகநபர் மீது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இச்சம்பவத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

# திறைசேரி நிரம்பினாலும் மக்களின் வாழ்க்கை சுமை தொடர்ந்து அதிகரிப்பு

## முஜிபுர் ரஹ்மான் எம். பி. சாடல்

கொழும்பு, மே 19

திறைசேரி நிறைந்து வழிவதாக அரசாங்கம் தெரிவிக்கின்ற போதும் மக்களின் வாழ்க்கை சுமை தொடர்ந்து அதிகரித்து செல்கிறது. அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்துக்கு முடியாமல் இருக்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது செய்ய முடியாத பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. கனவு உலகுக்கே நாட்டு மக்களை இவர்கள் கொண்டு சென்றார்கள். ஆனால், தற்போது இவர்களின் வாக்குறுதிகள் அனைத்தும் மீறப்பட்ட வாக்குறுதிகளாகவே காணப்படுகின்றன.

அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது டொலரின் பெறுமதி 290 ரூபாய் அளவிலே இருந்தது. ஆனால், குறுகிய காலத்தில் அது தற்போது 320 ரூபாய்க்கும் அதிக விலை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

அத்துடன் மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 3 தடவைகள் மின்சார கட்டணத்தை அதிகரித்திருக்கிறது. இதனால் மக்களின் வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்து, பணவீக்கம் கடந்த ஒரு வாரத்துக்குள் நூற்றுக்கு 5வீதம் அதிகரித்துள்ளது.

இதன் முகாமைத்துவத்தை அரசாங்கத்தினால் செய்ய முடியாமல் பலவீனமடைந்திருக்கிறது என்றார். (எ)

# "முத்துநகர் விவசாயிகளுக்கு உடனடியாக நீதி வழங்குக"

திருகோணமலை, மே 19

திருகோணமலை- முத்துநகர் கிராமத்தில் சூரிய சக்தி மின் திட்டத்தை முன்னெடுப்பதாகக் கூறி, பல தலைமுறைகளாக மக்கள் விவசாயம் செய்து வந்த பாரம்பரிய காணிகள் துறைமுக அதிகார சபையினால் கையகப்படுத்தப்பட்டு வருவதாகவும், இதனால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவிப்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கடும் கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, முத்துநகர் பகுதியில் வாழ்ந்து வரும் பொதுமக்கள் தமது வாழ்வாதாரத்திற்காகப் பல தலைமுறைகளாக விவசாயத்தையே நம்பியுள்ளனர். இவ்வாறான பின்னணியில், அங்கு முன்னெடுக்கப்படும் சூரிய சக்தி மின் திட்டத்திற்காக மக்களின் விவசாயக் காணிகள் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமானவை என்ற பெயரில் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன.

தங்களின் பாரம்பரிய பூர்வீகக் காணிகளைப் பாதுகாக்குமாறு கோரி, அப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக கவனவீர்ப்புப் போராட்டங்களையும் அதிகாரிகளுடனான சந்திப்புகளையும் மேற்கொண்டு வந்த போதிலும், இதுவரை அரசாங்கத்தரப்பிலிருந்து எந்தவொரு நீதியான தீர்வும் வழங்கப்படவில்லை என்பது ஏமாற்றமளிக்கிறது.

தற்போதுள்ள நிலவரப்படி, மேலும் சுமார் 400 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட விவசாய நிலங்கள் வேலி அடைக்கப்பட்டு, சூரிய சக்தி திட்டத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கைகள் தன்னிச்சையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த திட்டத்தினால் விவசாயிகள் மட்டுமன்றி, அப்பகுதியில் வாழும் மீனவக் குடும்பங்களும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வடக்கில் பணியின்றி சம்பளம்...

வைத்தியசாலைகளில் நீண்டகாலமாக மருத்துவர்கள் பற்றாக் குறை நிலவி வரும் நிலையில், அந்த வெற்றிடங்களை நிரப்ப மருத்துவர்கள் இல்லை என காரணம் தெரிவிக் கப்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.

எனினும், பட்டப்பின் படிப்பு பயிற்சி நிறைவுற்ற காலம் முதல் குறித்த ஐந்து மருத்துவர்களுக்கும் எந்த வைத்தியசாலைகளும் ஒதுக்கப்படாமல், அவர்கள் மாகாண சுகாதாரத் திணைக்களத்திலேயே தொடர்ந்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மேலதிகமாக காணப்படும் ஐந்து மருத்துவர்களையும் மருத்துவர்கள் பற்றாக்குறை காணப்படும் வைத்தியசாலைகளுக்கு உடனடியாக மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட சுகாதார ஒருங்கிணைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிறிபவானந்தராயா பணிப்புரை வழங்கியுள்ளார்.

இந்த விவகாரம் வடக்கு மாகாண சுகாதார சேவைகளின் நிர்வாகம் மற்றும் மருத்துவர்களின் பணியமைப்பு தொடர்பாக புதிய கவனத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ)

## யாழ்.பல்கலைக்கழகத்திலும்...

இனப்படுகொலை வாரத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு தூபியில் இடம்பெற்றது.

இதன் பொழுது பொதுசுடர் ஏற்றப்பட்டு, தொடர்ச்சியாக ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதோடு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது

நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், பல்கலை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

## அரசின் புதிய வரி கொள்கை...

பங்குதாரர்களுடன் நேற்று நடைபெற்ற விசேட சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

இந்த வரிக் கொள்கை வியாபார சமூகத்தை அச்சுறுத்துவதாகவும் அமைந்து காணப்படுவதோடு, புதிய தொழில் முயற்சிகள் உருவாவதற்கும், ஏற்கனவே தாபித்து காணப்படும் தொழில் முயற்சியாண்மைகளை விரிவுபடுத்துவதற்கும், புதிய வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் இது கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

அரசின் இந்த விதிகள் நீதித்துறை அதிகாரத்துக்கே சவால் விட்டு, அரசியலமைப்பையும் மீறும் விடயமாக அமைந்து காணப்படுகின்றன.
அதிகாரங்களுக்கிடையிலான பொதுவான தடைகள் மற்றும் சமன்பாடுகள் என்ற கோட்பாடு மற்றும் முக்கிய ஜனநாயக நிறுவனங்களான சட்டவாக்கம், நிர்வாகம் மற்றும் நீதித்துறைகளுக்கிடையே அமைந்து காணப்படும் அதிகாரங்களுக்கு இடையிலான தடைகள் மற்றும் சமன் பாடுகள் என்பன இதனால் மீறப்படுகின்றன. இது ஜனநாயகத்தின் மீது விழுந்த பெரும் அடியாகும்-என்றார். (அ)

## யுத்த வெற்றியின் 17வது...

திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் பிரிகேடியர் எஸ்.பி. கொஹோன தெரிவித்துள்ளார்.

இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை, சிவில் பாதுகாப்பு திணைக்களம், தேசிய மாணவர் படையணி, ரணவிரு சேவா அதிகாரசபை மற்றும் இராணுவத்தினரின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் விசேட அழைப்பாளர்கள் உட்பட 2,769 பேர் இதில் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## ஆடுகள் அடைக்கச்...

வீட்டிலிருந்து ஆட்டுப்பட்டி அமைந்துள்ள இடத்துக்குச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

அச்சமயம் அப்பகுதியில் கடும் மழை பெய்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

இதன் பின்னர், ஆட்டுப்பட்டிக்கு அருகில் அவர் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞருக்கு அடிக்கடி வலிப்பு நோய் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படும் நிலையில், சம்பவம் இடம்பெற்ற தினத்திலும் அவருக்கு வலிப்பு ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

அதன் காரணமாக அங்கு தேங்கிக் கிடந்த மழைநீரில் தவறி விழுந்து உயிரிழந்திருக்கலாம் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் மற்றும் மரணம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கண்ணீரால் நனைந்தது...

பிரகடனம் வாசிக்கப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் முறைப்படி ஆரம்பமாகின.

2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்டப் போரின்போது படுகொலை செய்யப்பட்ட இலட்சக்கணக்கான உறவுகளின் நினைவாக இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

காலை 10:29 மணியளவில் நினைவொலி எழுப்பப்பட்டு, முள்ளிவாய்க்கால் மண்ணே அதிர்ந்தது.

காலை 10:30 மணியளவில் உயிரிழந்த உறவுகளுக்காக இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இறுதிப் போரில் தனது குடும்பத்தின் நான்கு உறுப்பினர்களைப் பலிகொடுத்த வற்றாப்பளையைச் சேர்ந்த சிறீறஞ்சன் ரினோசா பொதுச்சுடரை ஏற்றி வைத்தார்.

அதேநேரத்தில், நினைவேந்தல் முற்றத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களும் ஒற்றைச் சுடர்களை ஏற்றி, மலர் தூவித் தமது உறவுகளுக்காகக் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

முல்லைத்தீவு மற்றும் வடக்கு, கிழக்கின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகை தந்த பல்லாயிரக்கணக்கான மக்கள், சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது நீண்ட வரிசையில் நின்று அஞ்சலி செலுத்தினர்.

17 ஆண்டுகள் கடந்தும், நீதிக்காகக் காத்திருக்கும் தமிழ் மக்களின் தளராத உறுதியை வெளிப்படுத்தும் விதமாக நேறைய நிகழ்வு அமைந்திருந்தது.

முள்ளிவாய்க்கால் முற்றமே மக்களின் கண்ணீராலும், சுடரொளியாலும் நிறைந்திருக்க, நாம் இன்னும் மறக்கவில்லை" என்கின்ற செய்தி உலகுக்கு உரக்கச் சொல்லப்பட்டது. (அ)

## இணைய குற்றங்களில்...

பொருளாதார ஆணைக் குழு சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற நிறுவனங்கள் மூலமாக விசாக்களைப் பெற்றுள்ளதாகத் தெரிய வந்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

கைது செய்யப் பட்ட வெளிநாட்டவர் கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், தங்களது கட்சிக்காரர்கள் போர்ட் சிற்றி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிலேயே பணி புரிவதாக நீதிமன்றங்களில் தெரிவித்துள்ளனர்.

உதாரணமாக, கடந்த மே 6ஆம் திகதி கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற பிணை விசாரணையின்போது, கைது செய்யப்பட்ட 37 சீனர்களின் சட்டத்தரணி குறிப்பிடுகையில், அவர்கள் போர்ட் சிற்றியில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஊடாகவே விஸா பெற்றுள்ளதாகக் கூறினார்.

அத்துடன், போர்ட் சிற்றிக்குள் இன்னும் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படாததால் மாத்திரமே அவர்கள் தலங்கம வடக்கு, கொஸ்வத்தை பகுதியிலுள்ள முகவரியிலிருந்து இயங்கி வந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

போர்ட் சிற்றி நிறுவனங்களுக்கான விஸாக்களை வழங்கும் பொறுப்பு குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கே உரியது என்றும், போர்ட் சிற்றி ஆணைக்குழு வெறும் பரிந்துரைகளை மாத்திரமே வழங்கி வருகிறது.

விண்ணப்பதாரரின் சொந்த நாட்டிலிருந்து பெறப்பட்ட பொலிஸ் சான்றிதழ் அல்லது பாதுகாப்பு ஆவணங்கள் விஸாவை பெற்றுக்கொள்ள கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

அண்மைக் காலமாக இலங்கையில் சைபர் குற்றங்களுடன் தொடர்புடையதாகக் கூறி சீனா, மியன்மார், வியட்நாம், கம்போடியா, தாய்லாந்து, தாய்வான், நேபாளம், மலேசியா, மடகாஸ்கர், பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரஜைகள் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு 2 பகுதியில், சீன மற்றும் ஸ்பானிஷ் மொழிகளுக்கு இடையிலான மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றிய பெரு நாட்டுப் பிரஜை ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## யுத்த வெற்றியை...

ஒருபோ தும் மறக்கக்கூடாது. இன்று பிளவுபடாத ஒரே நாடாக உள்ளதையிட்டு மகிழ்ச்சியடைய வேண் டும். மக்கள் அமைதியாக வும் நல்லிணக்கமாகவும் உள்ளார்கள் என முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அகில இலங்கை பௌத்த மகாசம்மேள னம் ஏற்பாடு செய்த, இராணுவத்தி னரை கௌரவிக் கும் நிகழ்வு கொழும்பில் நேற்று திங்கள் கிழமை நடைபெற்றது.

இந்நிழ்வில் கலந் துகொண்ட தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுத்தம் முடிவடைந்த இந்த தினத்தை கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். நாட்டை பாதுகாத்த இராணுவத்தினர் கௌரவிக்கப்படவேண்டும். யுத்த வெற்றி நாளை ஒருபோதும் மறக்கக்கூடாது. இன்று இலங்கை பிளவுபடாத ஒரே நாடாக உள்ளதையிட்டு மகிழ்ச்சியடையவேண்டும்.

அரசாங்கம் எப்படியோ என்று தெரியாது. ஆனால் மக்கள் நல்லிணக்கமாக உள்ளார்கள். அரசியல் பற்றி பேச விரும்பவில்லை. யுத்த வெற்றிக்காக உயிர்த் தியாகம் செய்த வீரர்கள் என்றும் நினைவு கூரப்படவேண்டும். அவர்களால் தான் இன்று நாடு ஐக்கியமாக உள்ளது.
[illegible]-என்றார். (அ)

## பொலிஸாருடன் நடந்த...

நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்துவதற்காக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, சிவில் சமூக அறிஞர்கள் மற்றும் கலைஞர்கள் உள்ளிட்ட குழுவினர் நேற்று பிற்பகல் அங்கு சென்றுள்ளனர்.

இருப்பினும், விமல் வீரவன்ஸ உள்ளிட்ட குழுவினருக்கு ரணவிரு நினைவுத் தூபிக்கு அருகில் சென்று மலரஞ்சலி செலுத்த பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் அனுமதி வழங்கவில்லை.

இதன்போது நிலைமையைக் கட்டுப்படுத்த முயன்ற பொலிஸ் அதிகாரி ஒருவர், "இரண்டு நிமிடங்கள் தாருங்கள், கேட்டுவிட்டுச் சொல்கிறேன்" எனக் கூறி உயர் அதிகாரி ஒருவருக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார். அந்த அழைப்பின்போது, "இன்றைய தினம் எவரையும் ரணவிரு நினைவுத் தூபிக்கு அருகில் செல்ல அனுமதிக்க வேண்டாம்" என உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து, அங்கிருந்த பொலிஸாருக்கும் விமல் வீரவன்ஸவின் குழுவினருக்கும் இடையே கடும் வாக்குவாதமும் தள்ளுமுள்ளும் ஏற்பட்டு அவ்விடத்தில் பெரும் பதற்றமான சூழ்நிலை உருவானது.

இந்த பாதுகாப்புப் பிரிவினரின் தடைகளையும் தள்ளுமுள்ளுகளையும் மீறி விமல் வீரவன்ஸ நினைவுத் தூபியை நோக்கி முன்னேறினார். எனினும், தூபியின் பிரதான பகுதிக்குச் சென்று அஞ்சலி செலுத்த பொலிஸார் இடமளிக்காததால், அவர் அதற்கு அருகாமையிலுள்ள தரையில் மலர்களை வைத்து தனது அஞ்சலியைச் செலுத்தினார்.

இந்த தள்ளுமுள்ளுப் போராட்டத்தின் போது விமல் வீரவன்ஸ நிலத்தில் இழுத்துச் செல்லப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தின் போது அங்கு நின்ற இருவரை பொலிஸார் கைது செய்து, அதில் ஒருவருக்கு விலங்கிட்டு பொலிஸ் ஜீப் வண்டியில் ஏற்றிச் செல்ல முயன்றனர். இதன்போது உடனடியாக தலையிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, கைது செய்யப்பட்டவர்களுடன் தானும் பொலிஸ் ஜீப் வண்டியில் ஏறிக்கொண்டார். விமல் வீரவன்ஸவின் இந்த அதிரடித் தலையீட்டை அடுத்து, கைது செய்யப்பட்ட இருவரும் பொலிஸாரால் உடனடியாக விடுவிக்கப்பட்டனர். (அ)

## பசிலின் மல்வானை வீடு...

காணி மற்றும் வீட்டை பல்கலைக்கழகத்திற்கு வழங்குமாறு கோரி பல்கலைக்கழக மாணவர்கள் குறித்த வீட்டை கடந்த 14 ஆம் திகதி முற்றுகையிட்டனர்.

கடந்த 14 ஆம் திகதியிலிருந்து நேற்று வரை மாணவர்கள் அங்கேயே தங்கியிருந்து சமைத்தும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். அத்துடன் பஸிலின் வீட்டை பல்கலை மாணவர்கள் தியேட்டராகக் கூட மாற்றியிருந்தனர்.

பல்கலைக்கழக நடவடிக்கைகளுக்கு குறித்த வீட்டை ஒப்படைக்கும் வரை வீட்டை விட்டு வெளியேற மாட்டோம் எனத் தெரிவித்து மாணவர்கள் அங்கு தங்கியிருந்தனர்.

இந்த நிலையில் குறித்தை வீட்டை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைப்பதற்கு பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நேற்று பிரதமருடன் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த மாணவர் ஒன்றிய இணைப்பாளர் சசிந்து பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்-காணியை கூடிய விரைவில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டதால், இந்த நேரத்தில் அந்த வளாகத்தில் இருந்து வெளியேறி செல்வதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மல்வானை காணியை வரும் நாள்களில் கூடிய விரைவில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைப்பதாகப் பிரதமர் உறுதியளித்துள்ளார். நாங்கள் கோரிய விடயத்திற்கு அரசாங்கத் தரப்பிலிருந்து ஒரு பதில் கிடைத்துள்ளது.

அந்தப் பதிலைத் தொடர்ந்து, இந்த நேரத்தில் மல்வானை காணியில் இருந்து வெளியேற நாங்கள் தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார். (அ)

## சென்னையில் உணர்வு...

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர் வன்னி அரசு தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், இந்திய பாராளுமன்ற உறுப்பினருமான தொல்காப்பியன் திருமாவளவன் மற்றும் இலங்கையிலிருந்து சென்ற பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் மற்றும் சென்னையில் வசிக்கும் ஈழத்தைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர் சண் மாஸ்டர் மற்றும் விடுதலைச் சிறுத்தை கட்சியின் முன்னணி பொறுப்பாளர்கள், அக் கட்சியின் தோழர்கள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் என பல நூறு பேர் நினைவேந்தல் நிகழ்வில் உணர்வெழிச்சியுடன் கலந்து கொண்டார்கள்.

நிகழ்வில் நினவுச் சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து வன்னியரசு, பாலாஜி, அர்ச்சுனா இராமநாதன், சண் மாஸ்டர் உள்ளிட்டவர்கள் உரையாற்றினார்கள். (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# குத்தகைக்கு வழங்கப்படும் மத்தள வானூர்தி நிலையம்!

## உன்னிப்பாக கவனிக்கிறது இந்தியா

கொழும்பு, மே. 19

சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அருகிலுள்ள மத்தள வானூர்தி நிலையத்தை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்க இலங்கை முடிவு என்றும் அதனை இந்தியா உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய ஊடகங்கள் இந்த செய்தியை வெளியிட்டுள்ளன.

இலங்கையின் இந்த முடிவானது, இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் மூலோபாய ரீதியான நிலப்பரப்புகளை ஏற்படுத்திக்கொள்ள முனையும் இந்திய நிறுவனங்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒரு அரிய வாய்ப்பாக அமையலாம் என்றும் குறித்த ஊடகங்கள் கருத்துரைத்துள்ளன.

"மத்தள ராஜபக்ஷ சர்வதேச வானூர்தி நிலையத்தை" 30 வருட கால குத்தகை அடிப்படையில் பொறுப்பேற்று நடத்துமாறு உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு இலங்கை அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அழைப்பு விடுத்துள்ளது.

தலைநகர் கொழும்பிலிருந்து சுமார் 250 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்த வானூர்தி நிலையம், கடந்த 2013ஆம் ஆண்டு சீன எக்ஸிம் வங்கியிடமிருந்து 209 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாகப் பெற்று பிரம்மாண்டமாகத் தொடங்கப்பட்டது.




எனினும், போதிய பயணிகள் போக்குவரத்து மற்றும் சர்வதேச வானூர்தி நிறுவனங்களின் பங்களிப்பு இல்லாததால், பல ஆண்டுகளாகப் பயன்பாடின்றி இருந்து வருகிறது.

இதன் காரணமாக, உலகின் மிகவும் வெறிச்சோடிய வானூர்தி நிலையம் என்ற பெயரையும் அது பெற்றுள்ளது.

இந்த நிலையில், பெரும் நட்டத்தைச் சந்தித்து வரும் இந்த வானூர்தி நிலையத்தை நவீன வானூர்தி போக்குவரத்து மையமாக மாற்றியமைக்கவும், அதன் வர்த்தக மதிப்பை உயர்த்தவும் தகுதியான மூலோபாய முதலீட்டாளர்கள் வரும் ஜூன் 9 ஆம் திகதிக்குள் தங்களின் விருப்பப் பிரகடனங்களை சமர்ப்பிக்குமாறு இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தமானது கட்டியெழுப்பல்-இயக்கல்-பரிமாற்ற மாதிரியின் கீழ் 30 வருட குத்தகை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

முன்னதாக மத்தள வானூர்தி நிலையத்திற்கு அருகிலுள்ள மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த அம்பாந்தோட்டை துறைமுகம், கடந்த 2017 ஆம் ஆண்டில் 99 வருட குத்தகை ஒப்பந்தத்தின் மூலம் சீனாவின் வசம் ஒப்படைக்கப்பட்டது.

இது புதுடில்லிக்கு பெரும் பாதுகாப்பு அச்சுறுத்தலையும் கவலையையும் ஏற்படுத்தியிருந்தது.

தற்போது, கடந்த ஏப்ரல் மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் பாதுகாப்பு உறவுகள் பலமடைந்து வரும் பின்னணியில், இந்த மத்தள வானூர்தி நிலைய முதலீட்டு வாய்ப்பை இந்தியா மிக உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகத் தூதரக தரப்புக்கள் தெரிவிக்கின்றன. (அ)

## 2 பொலிஸார் உட்பட நான்கு பேர் கொள்ளைக் குற்றச்சாட்டில் கைது!

கொழும்பு, மே. 19

இரத்மலானை வானூர்தி நிலைய வீதியில் பயணித்த ஓட்டோ ஒன்றை மறித்து, அதன் ஓட்டுநரிடமிருந்த 380,000 ரூபா பணத்தைக் கொள்ளையடித்த குற்றச்சாட்டில் கல்கிஸை தலைமையக பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் சேர்த்து, பொய் முறைப்பாடு வழங்கிய குற்றச்சாட்டில் முறைப்பாட்டாளர் உட்பட மேலும் இருவர் என மொத்தம் நால்வர் கல்கிஸை பிராந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் கல்கிஸை தலைமையக பொலிஸின் பல்வேறு முறைப்பாடுகள் பிரிவில் கடமையாற்றி வந்தவர்களாவர்.

கடந்த 15ஆம் திகதி இரத்மலானை வானூர்தி நிலைய வீதியில் வைத்து இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மொறட்டுவ, அங்குலானை சயுரபுர அடுக்குமாடி குடியிருப்புத் தொகுதியில் வசிக்கும் நபர் ஒருவர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட விசாரணை அதிகாரிகள், சந்தேக நபர்களான இரு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கைது செய்தனர்.

எனினும், கொள்ளையடிக்கப்பட்ட பணம் "சீட்டுப் பணம்" என முறைப்பாட்டாளர் கூறிய வாக்குமூலத்தில் பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்த போது, அந்த நபர் பொய் வாக்குமூலம் அளித்துள்ளமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து, பொலிஸாரைத் தவறாக வழிநடத்திய குற்றச்சாட்டின் கீழ், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய முறைப்பாட்டாளரான நபரும், அவருடன் இருந்த மற்றொரு பெண்ணும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட நான்கு சந்தேக நபர்களும் கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## மோசமான காலநிலை; 204 வீடுகளுக்கு சேதம்!

### 5277 பேர் கடுமையாகப் பாதிப்பு

கொழும்பு, மே. 19

இலங்கையில் அண்மையில் நிலவிய மோசமான வானிலை காரணமாக 200 இற்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் நேற்றுக் காலை வெளியிட்ட நிலவரப்படி, அண்மைய மோசமான வானிலையால் 13 மாவட்டங்களில் 204 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

அதேநேரம், 14 மாவட்டங்களில் உள்ள 1585 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 5277 பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

42 குடும்பங்களைச் சேர்ந்த 135 நபர்கள் இரண்டு தற்காலிகப் பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதுவரை இரண்டு உயிரிழப்புகளும் ஒரு காயமும் பதிவாகியுள்ளன. (அ)

## கியூ.ஆர். குறியீடு இன்றி எரிபொருள் வழங்கினால் கடும் சட்ட நடவடிக்கை

கொழும்பு, மே. 19

கியூ.ஆர். குறியீட்டு முறை இல்லாமல் எரிபொருள் வழங்கும் எரிபொருள் நிலையங்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விநியோக செயல்முறையில் கியூ.ஆர். குறியீட்டு முறை கட்டாயமாக பின்பற்றப்பட வேண்டும் என கூட்டுத்தாபனத்தின் நிர்வாக இயக்குநர் மயூர நெத்திகுமார தெரிவித்துள்ளார்.

கியூ.ஆர். முறையை மீறி எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளும் நிலையங்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், எரிபொருள் விநியோகத்தில் ஒழுங்கையும் வெளிப்படைத்தன்மையையும் உறுதி செய்வதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## லண்டன் புறப்பட்டார் ஹரிணி!

கொழும்பு, மே. 19



லண்டனில் நடைபெறவுள்ள அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று திங்கள்கிழமை மதியம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அவருடன் மேலும் இருவர் இந்த உத்தியோகபூர்வ தூதுக்குழுவில் இணைந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று பிற்பகல் 1:20 மணியளவில் சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல். -403 என்ற விமானம் மூலம் அவர்கள் பிரித்தானியாவின் லண்டன் நகர் நோக்கிப் புறப்பட்டுள்ளனர்.

பிரதமர் உள்ளிட்ட தூதுக்குழுவினர் தமது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு எதிர்வரும் 23 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளனர். (அ)







வீரகத்தி தனபாலசிங்கம் எழுதிய "பத்திரிகைத்துறையில் என் கதை". நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிறன்று மாலை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றபோது மூத்த பத்திரிகையாளரும் கலை இலக்கியவாதியுமான அன்னலட்சுமி இராஜதுரையை நூலாசிரியர் பொன்னாடை போரத்தி கௌரவிப்பதையும் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட் முகாமைத்துவப் பணிப்பாளர் குமார் நடேசன் நூலின் முதல் பிரதிகளை சட்டநிபுணர் கனத ஈஸ்வரன், இலக்கியப் புரவலர் காசிம் உமருக்கும் வழங்கி நூலை வெளியிட்டு வைப்பதையும் காண்கிறீர்கள். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.